முருகப்பெருமான் துணை

**மகான் ஜனந்தனர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

09.09.2021, வியாழக்கிழமை

1. மனமாயை வென்று மீட்டு
மக்களை கடைத்தேற்ற வேண்டி
ஞானம் அருளும் அரங்கனே
ஞாலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ யாளி திங்கள்
அறுநான்கு திகதி குருவாரம்
(பிலவ வருடம் ஆவணி மாதம் 24ம் நாள், 09.09.2021, வியாழக்கிழமை)
அரங்கனுக்கு ஜெனந்தனர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழிகளை காட்டும்
ஞான தேசிகன் சன்மார்க்க நெறி
நம்பிக்கைதரும் உயர் நெறியாக இருக்க
4. இருக்கவே கலியுக மக்கள்
ஏற்றுவந்து அரங்க ஞானியின்
கருத்துக்களை பின்பற்றிவர
கருணை எனும் வாழ்க்கை முறையை
5. முறையாக கடைப்பிடித்துமே
முழுமைபட நல்ல மக்களாய்
நிறைவும் அமைதியும் தரும்
நீதிமான்களாக வாழ்வை தொடர
6. தொடரவே மேலவர்கள் ஆசி
திருவருளாகத் துணை வந்துமே
இடர்கள் என்பதே அனுகாத
ஏவல் கஷ்டம் துன்பம் நெருங்கா
7. நெருங்காத பாதுகாப்பு நிறைந்த
ஞான வாழ்க்கையாக மாறும்
வருங்கால பலன்கள் எல்லாம்
வளமாகவும் நன்மைபடவும் தேறும்
8. தேற்றியே மக்களை காக்க
தெய்வமாக வந்த ஞானி
ஆற்றலும் அவதாரமும் அறிந்து
அகிலத்தார் ஓங்கார குடில் நோக்கி

9. நோக்கியே வரவர எங்கும்
நிம்மதி கருணை தயவு
ஆக்கமான வளர்ச்சி மாற்றம்
ஆன்மீகம் நிறைந்த பூமியாக

10. பூமியாக உலகம் மாறியே
புண்ணிய பலமாம் தருமம்
நேமமுடன் பரவிச் சிறந்து
நிலமதனில் தருமஞான ஆட்சி

11. ஆட்சி அரங்கன் ஆசிபட
அகிலம் தானும் தானாக அடையும்
மாட்சிமைபட மக்கள் வர மாற்றம் பெறும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–